
# டத்தாரான் மெர்டேகா நிகழ்ச்சிகளுக்கு முன்கூட்டியே அனுமதி பெற வேண்டுமா?

## டி.பி.கே.எல். நிபந்தனையை சாடினார் சமூக ஆர்வலர்

பெட்டாலிங் ஜெயா, மே 20- டத்தாரான் மெர்டேகாவில் ஏற்பாடு செய்யப்படும் அனைத்து கூட்டங்களுக்கும் அதிகாரப்பூர்வ அனுமதி பெற வேண்டும் என்ற கோலாலம்பூர் மாநகர மன்றத்தின் (டி.பி.கே.எல்.) நிபந்தனை நியாயமற்றது என்றும் பாரபட்சமான அமலாக்கத்திற்கான ஓர் உதாரணம் என்றும் வர்ணிக்கப்பட்டுள்ளது.

அமலாக்க அதிகாரிகளால் அண்மையில் இடையூறு செய்யப்பட்ட ஓர் அமைதி புத்தக வாசிப்பு மற்றும் கலந்துரையாடல் கூட்டம், மாநகர மன்றத்தால் மேற்கோள்காட்டப்பட்ட துணைச்சட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்ட ஒரு சமூக நடவடிக்கைக்கு தகுதி பெற்றதாகும் என்று மனித உரிமைகள் செயற்பாட்டாளர் வழக்கறிஞர் பி.ராஜசூரியன் கூறினார்.



இதர பல சமூக நடவடிக்கைகள் இடையூறுகளின்றி அனுமதிக்கப்படும் நிலையில், டி.பி.கே.எல்.லின் இந்த செயல் பாரபட்சமான அமலாக்கத்தை காட்டுகிறது என்று அவர் தெரிவித்தார்.

குறிப்பாக வாரயிறுதி நாட்களில் டத்தாரான் மெர்டேகாவிற்கு நீங்கள் சென்றால், எவ்வித இடையூறுமின்றி வெளியிட விருந்து (பிக்னிக்) போன்ற சமூக நிகழ்ச்சிகளில் ஏராளமானோர் ஈடுபட்டிருப்பதை நீங்கள் பார்க்கலாம் என்று அவர் கூறினார்.

அத்தகைய நிகழ்ச்சிகளுக்கும் இப்பொழுது அனுமதி பெற வேண்டுமா என்று அவர் வினவினார்.

நடமாட்டம், பேச்சு மற்றும் பேரணி சுதந்திரம் மீதான அரசியலமைப்புச் சட்ட உரிமைகளை அதிகாரிகள் எவ்வாறு அர்த்தம் கொள்கிறார்கள் என்ற கவலையை இந்த இடையூறுகள் எழுப்புகின்றன என்றும் ராஜசூரியன் குறிப்பிட்டார்.

டத்தாரான் மெர்டேகாவில் ஏற்பாடு செய்யப்படும் அனைத்து விதமான நிகழ்ச்சிகளுக்கும் மேயரின் அனுமதி முன்கூட்டியே பெறப்பட வேண்டும் என கடந்த செவ்வாய்க்கிழமை கூறிய டி.பி.கே.எல். அனுமதியில்லாமல் நடத்தப்படும் உரை நிகழ்ச்சிகள், ஆர்ப்பாட்டங்கள் பிரச்சாரங்கள் அல்லது அரசியல் மற்றும் சமூக நடவடிக்கைகளுக்கு தடை விதிக்கும் ஒரு மாநகர மன்ற துணை சட்டத்தை மேற்கோள்காட்டியது.

பொது ஒன்றுகூடல் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகளுக்கும் போலீஸ் அனுமதி பெறப்பட வேண்டும்.